www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 11

தேர்வு எண் | | | | | | |

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2024

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 50

## தமிழ்

### பகுதி – அ

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 8x1=8

1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.
   அ) அ.முத்துலிங்கம் – யுகத்தின் பாடல்
   ஆ) பவணந்தி முனிவர் – நன்னூல்
   இ) க.வில்வரத்தினம் – ஆறாம் திணை
   ஈ) இந்திரன் – பேச்சு மொழியும் கவிதை மொழியும்
   அ) அ,ஆ ஆ) அ,ஈ இ) ஆ,ஈ ஈ) அ,இ
2. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
   அ) அன்னம், கிண்ணம்
   ஆ) டமாரம், இங்ஙனம்
   இ) ரூபாய், லட்சாதிபதி
   ஈ) றெக்கை, அங்ஙனம்
3. உலகச் சிட்டுக்குருவிகள் நாள் எது?
   அ) மார்ச் 20 ஆ) மார்ச் 21 இ) மார்ச் 22 ஈ) மார்ச் 23
4. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
   அ) ஏதிலிக் குருவிகள் – மரபுக்கவிதை
   ஆ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை
   இ) யானை டாக்டர் – குறும்புதினம்
   ஈ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை
5. "வான் பொய்த்தது" – என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்
   அ) வானம் இடிந்தது
   ஆ) மழை பெய்யவில்லை
   இ) மின்னல் வெட்டியது
   ஈ) வானம் என்பது பொய்யானது
6. "காவடி சிந்துக்குத் தந்தை" என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
7. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
   அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
   ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
   இ) பகுதி, சங்கு, விகாரம்
   ஈ) பகுதி, விகுதி
8. வெண்சங்கு, நன்றுநன்று – இலக்கணக்குறிப்பு தருக.
   அ) உரிச்சொற்றொடர், இரட்டைக்கிளவி
   ஆ) வினைத்தொகை, அடுக்குத்தொடர்
   இ) பண்புத்தொகை, அடுக்குத்தொடர்
   ஈ) பண்புத்தொகை, வினையெச்சம்

### பகுதி – ஆ

#### பிரிவு– 1

II. அ) எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க. 3x2=6

9. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
10. ஐந்து வேளாண் மந்திரங்கள் யாவை?
11. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?
12. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
13. தமிழர்கள் புகழ், பழியை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

#### பிரிவு–2

ஆ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

14. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    அ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.
    ஆ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.
15. புணர்ச்சி விதி தருக.
    தண்டுடை (அல்லது) பொதுச்சிறப்பு
16. உறுப்பிலக்கணம் தருக. வைத்தார் (அல்லது) அலர்ந்து



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

17. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
அ) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி
ஆ) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை
18. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
உலை, உளை, உழை (அல்லது) வலி, வளி, வழி

பகுதி – இ

பிரிவு– 1

III. அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x4=12
19. க.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
20. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
21. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
22. "சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
23. "மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது" – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

பிரிவு– 2

ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8
24. பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக.
25. கீழ்க்காணும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தோடு ஏற்புடைய நயங்கள் நான்கினை எழுதுக.

*மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! – ஒரு*
*வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!*
*வளர்ந்துவளர்ந்து வரும் வெண்ணிலாவே! – மீண்டும்*
*வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே*
*கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! – பகல்*
*கூட்டினில் உறங்குவாயோ! – வெண்ணிலாவே!*
*பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! – நீயும்*
*பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!*

– கவிமணி

26. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அ) காலங்காத்தால எந்திரிச்சுப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்
ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.
இ) காலத்துக்கேத்த மாரிப் புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்.
ஈ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்
27. தமிழாக்கம் தருக.
1) The Pen is mightier than the sword
2) Work while you work and play while you play.
3) Education is the most powerful weapon, which you can use to change the world
4) Culture does not make people; People make culture.

பகுதி – ஈ

IV. ஏதேனும் ஒன்றுக்கு விடை தருக. 1x6=6
28. நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
29. "சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே" என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.
30. வாடி வாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.
V. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 1x4=4
31. "அம்ம வாழி தோழி" – எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை எழுதுக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com